ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

8-ம் வகுப்பு அறிவியல்(பருவம்-3)

21-பயிர்ப்பெருக்கம் மற்றும் மேலாண்மை

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. இந்தியாவில் மழைக்காலங்களில்(ஜூன் முதல் செப்டம்பர் வரை) வளர்க்கப்படும் பயிர்கள் __________ எனப்படும்.

   அ. காரிப் ஆ. ரபி இ. சயாடு ஈ. எதுவுமில்லை

2. பயிர்ப்பெருக்கத்தின் அடிப்படைச் செயல்களில் பொருந்தாதது எது?

   அ. விற்பனை ஆ. உழுதல் இ. உரமிடுதல் ஈ. அறுவடை

3. விதைத்தலின் எளிமையான மற்றும் சிக்கனமான முறை _____ ஆகும்.

   அ. விதைக்கும் கருவி ஆ. ஊன்றுதல்

   இ. கைகளால் விதைத்தல் ஈ. அனைத்தும்

4. தாவர மற்றும் விலங்குக் கழிவுகள் மட்குவதால் கிடைக்கும் கரிமப் பொருள்கள் _____ எனப்படும்.

   அ. அனங்கக மட்கு ஆ. அங்கக மட்கு

   இ. செயற்கை உரம் ஈ. யூரியா

5. இந்தியாவில் பெரும்பாலும் காணப்படும் அறுவடை முறை எது?

   அ. கருவி கொண்டு செய்தல் ஆ. கதிரடித்தல்

   இ. அரிவாளால் அறுத்தல் ஈ. கைகளால் பிடுங்குதல்

## II.சரியா? தவறா? என எழுதுக

1. அறுவடைக்குப் பிந்தைய செயல் விதை விதைத்தலாகும்.
2. செயற்கை உரங்களில் NPK உள்ளது.
3. நீண்ட வரிப்பள்ளத்திலுள்ள குழிகள் அல்லது துளைகளில் விதைகள் கைகளால் ஊன்றப்படும்.
4. உழுவதற்குப் பயன்படும் ஏர் கலப்பை அலுமினியத்தால் செய்யப்படுவது இல்லை.
5. நெல் மற்றும் சோளம் ஆகியவை பணப்பயிர்கள் ஆகும்.

LIVEWORKSHEETS

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பது ________.
2. _______ மற்றும் மண் நுண்ணுயிரிகள் வளர தளர்வான மண் அவசியம்.
3. பயிர் உற்பத்தியில் இரண்டாவது நிலை ______________________.
4. தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டப் பொருள்கள் ____________.
5. நெல்லைக் கதிரடித்தபின் தானியங்களை ______________________ பிரிக்க வேண்டும்.

மண்புழு

எரு மற்றும் உரம்

விதை விதைத்தல்

வேளாண்மை

உமி / பதரிலிருந்து

## IV.பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| 1. செயற்கை உரம் | - | மண்புழு | - |
| 2. டிராக்டர் | - | தர்பூசணி, வெள்ளரி | |
| 3. உழவர்களின் நண்பன் | - | யூரியா, சூப்பர் பாஸ்பேட் | |
| 4. சயாடு பயிர் | - | கோதுமை, பட்டாணி | |
| 5. ரபி பயிர் | - | நவீன விதைக்கும் கருவி | |

LIVEWORKSHEETS